**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 38/2017**
திருமதி.ரஜேஸ்வரி (D.W –6) **08.10.2025**

2 முதல் 4 பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜர் இல்லை. 2 முதல் 4 பிரதிவாதிகள் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு **1** மற்றும் **5** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா முதல் பிரதிவாதி என்னுடைய அம்மா என்றால் சரி. ஐந்தாம் பிரதிவாதி என்னுடைய சகோதரி என்றால் சரி. தாவா தாக்கல் செய்துள்ள வாதி என்னுடைய மூத்தசகோதரர் என்றால் ஆமாம். தாவா சொத்துக்கள் என்னுடைய தகப்பனார் ராமசாமி சம்பாதித்தவர் என்றால் ஆமாம். சொத்துக்களை பொறுத்து எத்தனை வழக்குகள் நடக்கிறது என்றால் மூன்று வழக்குகள் நடந்து வருகிறது. வழக்கில் கிருஷ்ணசாமி சாட்சியம் அளித்ததை படித்துப் பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். என்னுடைய தாயார் தாவாவில் சாட்சியம் அளித்த விவரங்களை படித்துப் பார்த்தேன் என்றால் சரி.

2. என்ன படித்துள்ளேன் என்றால் ஒன்பதாம் வகுப்பு படித்துள்ளேன் என்னுடைய தகப்பனாரின் கையொப்பத்தை என்னால் அடையாளம் காட்ட முடியும் என்றால் சரி. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ–1 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய அப்பா உடையது என்றால் தவறு. என்னுடைய கணவர் பெயர் என்னவென்றால் முத்துக்குமார். அவருடைய கையொப்பம் என்னால் அடையாளம் காட்ட முடியும் என்றால் சரி.

பி.வா.சா.ஆ–1 ஆவணத்தில் என்னுடைய கணவர் கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை.

3. தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் இன்னார் என்று நிரூபித்த சாட்சியாகவும் கடைசி பக்கத்தில் முதலாவதாக உள்ள சாட்சி கையொப்பம் என்னுடைய கணவர் உடையது என்றால் தவறு. தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள புகைப்படத்தில் உள்ள நபர் யார் என்றால் என்னுடைய தகப்பனார். என்னுடைய தகப்பனார் எப்போது இறந்து போனார் என்றால் டிசம்பர் மாதம் 2011 ல் இறந்து போனார். அவர் என்ன தொழில் செய்து வந்தார் என்றால் பிரின்ஸ் டையிங் மற்றும் ராஜேஸ்வரி ப்ளீச்சிங் நிறுவனங்களை நடத்தி வந்தார். அந்த நிறுவனங்கள் தனிப்பட்ட முறையில் என்னுடைய அப்பா நடத்தி வந்தார் என்றால் தவறு. என்னுடைய அண்ணன் உடன் இருந்து செய்து வந்தார். முதல் விசாரணை வாக்குமூலத்தின் இரண்டாவது பத்தியில் என்னுடைய தகப்பனார் பிரின்ஸ் டையிங் நிறுவனம் அவருடைய சுய சம்பாத்தியத்தால் நிறுவப்பட்ட நிறுவனம் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரி.

4. அந்த பட்டியில் சொல்லப்பட்டுள்ள மற்ற விவரங்களும் என்னால் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் ஆமாம். வியாபாரத்திற்காக என்னுடைய தகப்பனார் TIC நிறுவனத்தில் கடன் பெற்றார் என்றால் ஆமாம். சொத்துக்கள் சம்பந்தமாக என்ன ஆவணங்கள் பார்த்தேன் என்றால் டையிங் நிறுவனம் நடத்தி வந்த பத்திரத்தை பார்த்துள்ளேன். என்ன ஆவணம் என்றால் சாட்சி பதில் அளிக்கவில்லை. திருப்பூர் பொது சுத்திகரிப்பு நிலையத்தில் சாயப்பட்டறை கழிவு நீரை சுத்தம் செய்வதன் பொருட்டு பங்குகளை என் தகப்பனார் வாங்கி இருந்தார் என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனார் உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தார் என்பதற்கு

ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. ஆனால் உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தார்.

5. முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல் பல நாட்களாக என்னுடைய தகப்பனார் படுத்த படுக்கையாக இருந்து வந்தார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் உயிருடன் இருந்தபோது என்னுடைய தாயார் சரஸ்வதி பெயருக்கு சொத்துக்களை பொறுத்து தான செட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ–1 ஏற்படுத்திக் கொடுத்தார் என்றால் தவறு. அதில் என்னுடைய கணவர் முத்துக்குமார் தான் இன்னார் என்று நிரூபிக்கும் சாட்சியாகவும் ஆவணத்தில் சாட்சியாகவும் கையொப்பம் செய்துள்ளார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அந்த விபரங்கள் என்னிடம் யாரும் சொல்லவில்லை. தவறாக சாட்சியம் அளிக்கிறேன் எனக்கும் என் குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கும் இந்த விபரங்கள் தெரியும் என்றால் சரியல்ல.

6. தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் சொத்துக்களை என்னுடைய அம்மா அனுபவம் செய்து வந்தார் என்றால் தவறு பிரின்ஸ் டையிங் நிறுவனத்திற்காக சுத்திகரிப்பு நிலையத்தில் பெற்ற பங்குகளை பொறுத்து மற்றும் தொழிலை பொறுத்து 25/7/2011 ஆம் தேதி ஒரு வர்த்தமான கடிதத்தை என் அப்பா என்னுடைய அம்மா சரஸ்வதி பெயருக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் தவறு. தாவா சொத்தையும் என்னுடைய சகோதரி சுமதி சொத்துக்களை பொறுத்து இருவரும் சேர்ந்து 22.11.2016 ஆம் தேதி அசல் வழக்கு எண். 100/2017 வாதி தயாநிதி பெயருக்கு தான செட்டில்மெண்ட் படி பாத்தியப் படுத்தி கொடுத்துள்ளார்கள் என்றால் தவறு.அந்த ஆவணத்தை தவறாக ஏற்படுத்தி உள்ளார்கள்.

7. அந்த ஆவணத்தை படித்து பார்த்தீர்களா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய அப்பா தொழிலுக்காக எங்கு கடன் வாங்கி இருந்தார் என்றால் டையிங் தொழிலுக்காக கார்ப்பரேஷன் வங்கியில் கடன் பெற்றிருந்தார். அந்த கடன்களை யார் திருப்பி செலுத்தினார்கள் என்றால் எல்லோரும் சேர்ந்து திருப்பி செலுத்தினோம். எல்லோரும் கடன் தொகையை திருப்பி செலுத்தியதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் என்னுடைய சகோதரியிடம் உள்ளது. எங்களுடைய பங்கிற்காக எவ்வளவு கடன் தொகை செலுத்தப்பட்டது என்றால் எங்கள் கடன் பங்காக ஒன்பது லட்சம் கொடுத்துள்ளோம் மொத்த கடன் விவரம் என்ன என்றால் 32 லட்சம். 9 லட்சம் தொகை கொடுத்ததற்கு ஆதாரங்கள் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை. என்னுடைய சகோதரியிடம் உள்ளது.

8. அம்மாதிரி கடன் தொகையை யாரும் கொடுக்கவில்லை. தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. கடன் தொகை முழுவதையும் சரஸ்வதி தான் செலுத்தினார் என்றால் தவறு. வங்கி மேலாளர் சரஸ்வதி தான் கடன் தொகை முழுவதையும் செலுத்தியதாக ரசீது கொடுத்துள்ளார் என்றால் தவறு. தாவா சொத்தை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் இரண்டு வருடங்களுக்கு முன்பு பார்த்தேன். அதில் அசல் வழக்கு எண்.100/2017 வாதி தொழில் செய்து வருகிறார் என்றால் தவறு. எல்லோரும் பொதுவாக அதை வைத்துள்ளோம். இன்றைய தேதியில் தயாநிதி தான் அங்கு தொழில் செய்து வருகிறார் என்றால் தெரியாது.

9. அசல் வழக்கு எண்.100/2017 ல் தயாநிதி தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பார்த்து உள்ளீர்களா என்றால் இல்லை. தாவா சொத்துக்களை என்னுடைய தகப்பனார் அவர் விருப்பத்துடன் என்னுடைய தாயார் பெயருக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்து ஏற்படுத்திக் கொடுத்து அதில்

என் கணவர் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் தவறு. அவ்வாறு ஆவணம் ஏற்பட்ட போது என்னுடைய கணவர் சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்போது என்னுடைய சகோதரர் ரத்தினசாமி தாவா சொத்துக்களில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனக்கும் பாகம் கிடைக்கும் என்ற அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

அசல் வழக்கு எண்..98/2021 8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை. அசல் வழக்கு எண்.100/2017 வாதி தரப்பில் மேலே சொன்ன குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.10.08 15:36:19 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.